இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - 2006
இறுதிப் பரீட்சை 2006 - மட்டம் 04
LWU 2312 – குற்றவியல் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 22.03.2006 நேரம்: பி.ப 1.30 - பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. திரு ஹெரன்கட் என்ற வெளிநாட்டு பிரசை ஒருவர் இலங்கையில் மிக நீண்ட காலமாக வசித்து வருகின்றார். அவர் ஒரு திறமை வாய்ந்த இணையதள வடிவமைப்பாளர்(Webpage designer) ஆவதுடன் அவர் இணைத்தளத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். திருமணம் செய்யாத அவர் மிகவும் அமைதியாக வாழ்க்கை நடத்தி வந்தார்.

ஒரு நாள் அவர் தன்னுடைய தனிப்பட்ட இணையத்தளத்திலே விநோதமான விளம்பரம் ஒன்றை பிரசுரித்தார். இந்த விளம்பரம் ஊடாக அவர் யாராவது தன்னை தானே சுயமாக கொலை செய்து உண்ண விரும்பினால் என்னை தொடர்பு கொள்ளவும் என வேண்டுகோள் விடுத்தார்.

அமெரிக்கரான திரு. பிலிப் இச்செய்தியை கண்டு, திரு ஹெரன்கட் தன்னை கொலை செய்து உண்பதற்கு தான் விருப்பம் என அவருடைய விருப்பத்தை வெளிப்படுத்தி பதில் அளித்தார். இந்த பதிலால் மிகவும் மகிழ்ச்சி அடைந்த திரு. ஹெரன்கட் இன்னும் சில மின்-அஞ்சல்களை அனுப்பியதோடு அதனை அடுத்து திரு.பிலிப் இலங்கை வருவதற்கான, விமானச்சீட்டு, ஏனைய வசதிகள், கடவுச்சீட்டு ஆகியவற்றை ஒழுங்குபடுத்தினார்.

திரு. பிலிப்பை வரவேற்க திரு. ஹெரன்கட் விமான நிலையத்துக்கு சென்றார். அதன் பின்பு இலங்கையின் மத்திய மலைப்பிரதேசத்தில் தனித்த பகுதியொன்றில் இருந்த தனது வீட்டுக்கு அவரை அழைத்துச் சென்றார். இரண்டு நாட்கள் மது அருந்தியதோடு உடல் உறவும் கொண்டனர். மூன்றாவது நாள் திரு. பிலிப் திரு.ஹெரன்கட் இடம் தனது ஆசையை நிறைவேற்றுமாறு வேண்டினார். திரு ஹெரன்கட், கொலை செய்வதற்கான தன்னுடைய விருப்பத்தை முழுமையாக கைவிட்டிருந்த போதிலும் திரு. பிலிப் பலதடவைகள் வற்புறுத்தியமையால் அவருடைய ஆசையை நிறைவேற்றினார். திரு ஹெரன்கட் பாண் வெட்டும் கத்தியைக் கொண்டு திரு. பிலிப்புடைய கழுத்தை வெட்டினார் சுயநிலைவிழந்த அவரது உடலை ஒருசில நேரம் கட்டிலிலே வைத்திருந்தார் அதன் பின்பு அவர் திரு. பிலிப்புடைய தலையையும் கால்களையும் வெட்டி அவற்றை குளிர்சாதன பெட்டியிலே வைத்தார். சிறிது நேரத்தின் பின்பு மனித நர மாமிசத்தை பயன்படுத்தி உணவு தயாரித்து அவற்றை வைன், உருளைக் கிழங்கு சிப்ஸ் என்பவற்றுடன் சாப்பிட்டார்.

உள்நாட்டு பொலிஸ்சாருக்கு தகவல் கிடைத்ததை தொடர்ந்து பொலிஸார் திடீர் சோதனை யொன்றை மேற்கொண்டனர். குளிர்சாதன பெட்டியில் வைக்கப்பட்ட உடல் பாகங்களை எடுத்தனர். தற்போது திரு.ஹெரன்கட் கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அவர் இக் குற்றச்சாட்டை மறுத்ததோடு மனித நரைமாமிசத்தை உண்ணும் பழக்கம் இலங்கையில் தடைசெய்யப்பட வில்லை என்பதையும் குறிப்பிடுகிறார். மேலும் தான் நல்லெண்ணத்துடன் செயல்பட்டதாகவும் திரு.பிலிப் மிகவும் விருப்பத்துடனேயே தன்னை கொன்று சாப்பிடுமாறு குறிப்பிட்டார் எனவும் கூறினார். மேலும் குற்ற மனத்துடன் தான்

அச்செயலை மேற்கொள்ளவில்லையாதலால் இலங்கை குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவியல் பொறுப்பிலிருந்து தனக்கு பாதுகாப்பு உண்டு எனவும் குறிப்பிடுகிறார்.

ஆராய்க.

2. திரு..ரணபாகு "சொப்ட் பிரின்டிங் பிரைவேட் லிமிடட்டின்" உரிமையாளர் ஆவார். இது அச்சக வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த தனியார் கம்பனி ஒன்றாகும்.

ஒரு அவசரமான கட்டளையொன்றை மறுநாள் விநியோகம் செய்ய வேண்டிய காரணத்தினால் ஒரு நாள் இரவு நடுநிசிவரை அவர் வேலை செய்தார். நள்ளிரவு 12.30 மணியளவில் அவர் அறிந்திராத ஒரு நபர் தொலைபேசி அழைப்பொன்றை ஏற்படுத்தி ரூ 50,000/= வை தனக்கு தருமாறு வற்புறுத்தினார். இந்த கோரிக்கையை திருப்திபடுத்த தவறுமிடத்து அவனுடைய மனைவியையும் குழந்தையையும் ஒரு குழலை கொண்டு கடத்துவதாகவும் அச்சுறுத்தினான்.

திரு.ரணபாகு ஒரு குடும்பஸ்தனாக இருந்த வேளை, மனைவி, குழந்தை ஆகியோர் உயிருக்கு ஏற்படுத்தும் ஆபத்தை தவிர்க்கும் வகையில் இப்பணத்தை தான் தருகிறேன் என உறுதி வழங்கினான். அத்துடன் அப்பணத்தை பெற்றுக்கொள்ள ஒருவரை அனுப்பி வைக்குமாறு தொலைபேசியில் அழைத்த முன்னறியாத நபரிடம் கூறினார்.

சிறிது நேரத்திற்கு பின்பு, முகமூடி அணிந்த ஒரு மனிதன் அறைக்கதவருகில் இருந்தான். திரு.ரணபாகு அவனிடம் ரூ 50,000/= பணத்தை கையளித்தார்.

ஆராய்க.

3. திரு தனசிரி "வனிஜா வங்கி கம்பனி பிரைவேட் லிமிடெட்" ன் ஒரு கனிஷ்ட வங்கி நிர்வாக உத்தியோகத்தர் ஆவர். அவருடைய பிரதான கடமைகளாவன வாடிக்கையாளர்களிடம் இருந்து பணவைப்புகளை ஏற்றுக் கொள்ளல், அவற்றினை அவர்களின் தனிப்பட்ட கணக்குகளின் வரவு வைத்தல், பணத்தை மீள பெறுவதற்கு அதிகாரமளித்தல் மற்றும் காசோலைகளை மாற்றிக் கொடுத்தல் என்பனவாகும்.

வாடிக்கையாளர்களுக்கும் வங்கி ஊழியர்களுக்கு மிகவும் பாதுகாப்பாகவும், வசதியாக இருக்கக் கூடிய வகையில் இலத்திரனியல் இயந்திரம் ஒன்றை "வனிஜா வங்கி" அறிமுகப்படுத்தியது. இப்புதிய வசதியுடன், வாடிக்கையாளருக்கு எந்த நேரத்திலும் பணத்தை வைப்புச்செய்யவும் மீள எடுக்கவும் வசதியாக இருந்தது.

திரு.தனசிரியுடைய நியமன கடிதம் பல்வேறு நிபந்தனைகளை உள்ளடக்கியிலிருந்து, ஏதேனும் நிபந்தனை மீறப்பட்டால், குற்றவியல் தவறு ஒன்று புரிந்ததாக கருதப்படும் எனவும் குறிப்பிட்டிருந்தது. பிரதான நிபந்தனையானது அவர் தனது பெயரில் வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிப்பதில் இருந்து தடை செய்யப்பட்டிருந்தார், மேலும் அவருடைய நெருங்கிய உறவினர் எவராயினும் அவ்வங்கியில் கணக்கொன்றை ஆரம்பிக்க விரும்பினால், அவருடைய உறவு முறை மற்றும் ஏனைய தகவல்கள் அனைத்தையும் அவர் வங்கி அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

திரு. தனசிரி உடைய சகோதரி ஒருவர் 'வனிஜா வங்கி' யில் சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பித்தார் ஆயின் இதனைப்பற்றி தனசிரி வங்கி அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தவில்லை. இதனையடுத்து தனசிரி இலத்திரனியல்

இயந்திரம் மூலமாக வங்கி பணத்திலிருந்து ரூ 50,000/= ஐ சகோதரியுடைய கணக்கிற்கு மாற்றம் செய்தார். இவர் தற்போது தண்டனைச் சட்ட கோவையின் பிரிவுகள் 366 மற்றும் 367 இன் கீழ் திருட்டு குற்றம் சாட்டப்பட்டுள்ளார். மேலே தரப்பட்ட நிகழ்வுகளை கொண்டு இக்குற்றத்தை நிரூபிக்க முடியுமா என்பதை வங்கி அதிகாரிகள் அறிய விரும்புவதோடு, அவ்வாறு இல்லை எனின் அவர் மீது சரியாக எக்குற்றத்தை சார்த்தி வழக்கு தொடரப்படலாம் என அறிய விரும்புகின்றனர்.

வங்கி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்குக.

4. திரு. முத்தலிப் அண்மையில் ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தவர் ஆவர் அவர் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரிந்திருந்த அதேவேளை அவர் சட்டத்திற்கு கீழ்படிந்து நடக்கும் ஒரு பொலிஸ் அலுவலர் ஆவர். எவ்வாறாயினும் அவருடைய அயலவரான திரு. சில்வா இற்கும் அவருக்கும் இடையே தங்களுடைய காணியை பிரித்திருந்த ஒரு முட்கம்பி வேலி தகராறு காரணமாக சுமூகமான உறவு காணப்படவில்லை. ஒரு நாள் முடகம்பி வேலியின் ஒரு பகுதி உடைந்திருப்பதை கண்டு திரு. முத்தலிப் இது அயலவரான சில்வாவினால் செய்யப்பட்ட செயல் என எண்ணினார். இதனால் கோபமடைந்த திரு. முத்தலிப் இதனைப்பற்றி திரு. சில்வாவிடம் விசாரித்தார். அந்த வேளையில் கோபமடைந்த திரு. சில்வா திரு. முத்தலிப்பை பார்த்து "வயது போன முட்டாளே உனக்கு நான் பயப்பட மாட்டேன்" என குறிப்பிட்டான். இவ்வாறு தன்னை இகழ்ந்ததை கண்ட திரு. முத்தலிப் தன்னிலை மறந்து தனது இடுப்பிலே மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியால் திரு. சில்வாவை நோக்கி சுட்டார். அக்கணத்திலேயே திரு. சில்வா மரணமடைந்தார்.

மரண விசாரனை பரீட்சையை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி இறந்தவரின் முண்டம் மற்றும் தலைப் பகுதிகளில் பல்வேறுபட்ட துப்பாக்கி சூட்டு காயங்கள் காணப்படுவதாக குறிப்பிட்டார். குறிப்பாக மூளைக்கு செலுத்தப்பட்ட ஒரு துப்பாக்கிச் சூடு உடனடியான ஆபத்தை ஏற்படுத்தி இறப்பினை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

ஆராய்க.

5. இலங்கை தண்டனைச் சட்டகோவையின் இயைபான ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி குழந்தை பருவம் என்ற பாதுகாப்பை( Defence of Infancy) ஆராய்க.

6. சிரிமல் திறந்த பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் 19 வயதுடைய சட்ட மாணவன் ஆவான். அவன் பல்கலைகழகத்தில் வைத்து ரன்மலி என்பவளை சந்தித்தான். அவர்களிடையே காதல் ஏற்பட்டது. ரன்மலி சிரிமல் மீது தீவிரமான காதல் கொண்டிருந்தாள் என்பதை மாணவர்கள் மத்தியில் அனைவரும் அறிந்திருந்தனர். இவருடைய பெற்றோர்கள் இவர்களின் தொடர்பை பற்றி அறிந்திருந்த அதே வேளை குறிப்பாக ரன்மலியுடைய பெற்றோர் இக்காதல் சோடிகளுக்கு தமது ஆசிர்வாதத்தை வழங்கியிருந்தனர். சிரிமல் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இருந்த பிஸ்ஸ ஹட்டில்(Pizza hut) பகுதி நேர ஊழியனாக தொழில்புரிந்து வந்ததுடன் அங்கு கிடைக்கும் பணம் முழுவதையும் ரன்மலிக்கு பரிசுகள் வாங்க செலவழித்தான்.

ஒரு நாள் ரன்மலியுடைய பெற்றோர் விடுமுறைக்காக வெளியே சென்றிருந்த போது சிரிமல்லை வீட்டுக்கு வருமாறு ரன்மலி அழைத்தாள். சிரிமல் அன்று இரவு

ரன்மலியுடன் அவளுடைய வீட்டில் தங்கினான். மேலும் அவளுடைய தூண்டுதலினால் ரன்மலியுடன் உடல் உறவு கொண்டான். சிரிமல் இரவு தங்கியிருந்ததை அறிந்த ரன்மலியுடைய பெற்றோர் இந்த கீழ்தரமான செயலினால் ஆத்திரமுற்றனர். மேலும் ரன்மலியுடைய தந்தை சிரிமல் தன்னுடைய மகளை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினான் என்ற குற்றச்சாட்டின் பேரில் உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்தார்.

பொலிஸ், உடனடியாக மருத்துவ பரிசோதனை ஒன்றிற்கு ஏற்பாடு செய்தது. பெண்ணுறுப்பில் காயங்கள், கீறல்கள், நசிவுகள் என்பன காணப்படவில்லை என மருத்துவ அறிக்கை குறிப்பிட்டது. மேலும் விந்துக்கள் பெண்ணுறுப்பின் புறப்பகுதிகளில் கண்ணுக்கு தெரியக்கூடியதாக இருந்த போதிலும் பெண்ணுறுப்பில் பாதிப்புகள் ஏற்பட்டு இருக்கவில்லை என குறிப்பிட்டது.

சிறிமல் உமது ஆலோசனையை நாடுகின்றான். சிறிமல்லுக்கு ஆலோசனை வழங்குக.

7. "சான்று என்பதால் கருதப்படுவது ஏதேதும் ஆய்பொருள் நிகழ்வு ஒன்றை நீதிமன்றத்தின் முன்பு எண்பித்தல் அல்லது எண்பிக்காது விடல் என்பதாகும்".

மேலே தரப்பட்ட கூற்றை துணைகொண்டு பல்வேறுபட்ட சான்றுகளை ஆராய்க.

பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளையும், தீர்க்கப்பட்ட வழக்குகளையும் கொண்டு உமது விடையை ஆதாரப்படுத்துக.

8. பின்வருவனவற்றில் ஏதேனும் <u>இரண்டு</u> பற்றி சிறு குறிப்பு எழுதுக.

(அ) குற்றமுறையான கையாடல்

(ஆ) இசைவு என்ற பாதுகாப்பு

(இ) சித்தசுவாதீனமின்மை

(ஈ) செயற்கோவை

(பதிப்புரிமையுடையது)